2010 நவம்பர் 12]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கான சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2010), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2010) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 10–11–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2

பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"That the proposed amendments shall be omitted."

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, பேசுகிறீர்களா? (குறுக்கீடு) திரு. சி. சண்முகவேலு, பேசுங்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இயக்கூர்திகள் வரி விதிப்பு திருத்தச் சட்டம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குச் சிலவற்றைக் கொண்டுவருகிறேன், தற்பொழுது பள்ளி, கல்லூரிப் பேருந்துகள் மற்றும் பிற நேர்வுகளில் ஓட்டுநர்கள் நீங்கலாக ஒவ்வொரு நபருக்கும் முறையே ரூ.50/-, ரூ.100/-, ரூ.150/- காலாண்டு வரியாக செலுத்தப்பட்டு வருகிறது. கல்வி நிறுவனங்களின் பேருந்துகள் அந்தந்த மாவட்டத்தில் போகும்பொழுது வட்டாரப் போக்குவரத்து அதிகாரியிடம் அனுமதி வாங்கிவிட்டால் அதற்குப் பணம் கட்டத் தேவையில்லை.

2010 நவம்பர் 12] [திரு. சி. சண்முகவேலு]

அதேபோல, வெளி மாவட்டங்களுக்குச் செல்லும்பொழுது போக்குவரத்து ஆணையரிடம் அனுமதி வாங்குகிறோம். அதற்கும் வரி விதிப்பு இல்லை.

தற்பொழுது இயக்கூர்திகள் வரி விதிப்பு சட்டமுன்வடிவிலுள்ள திருத்தத்தின்படி அரசு அறிவித்துள்ளதைப் பார்த்தால், ஏற்கெனவே மூன்று மாதங்களுக்கு ஒரு இருக்கைக்கு 50 ரூபாய், 100 ரூபாய், 150 ரூபாய் என்று இருந்ததோடு இப்பொழுது வரி மேலும் போடப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது கல்வி நிறுவனப் பேருந்துகள் தொடர்புடைய அந்த நிறுவனத்தின் மாணவர்களையும், பணியாளர்களையும் ஏற்றிச் சென்றால். ஏழு நாட்களுக்கு அல்லது அதன் பகுதிக்கு, ஒரு இருக்கைக்கு 30 ரூபாய் என்று வருகிறது. அதேபோல, பிற ஊர்திகளுக்கு ஏழு நாட்களுக்கு ஒரு இருக்கைக்கு 90 ரூபாய் என்றும், மேலும் பிற நோக்கத்திற்காக கல்வி நிறுவனங்களின் பேருந்துகள் மற்றும் பிற இயக்கூர்திகளைப் பயன்படுத்தும்போது இருக்கைக்கு ஒரு நாளைக்கு ரூ.30/- என்றும் அறிவித்துள்ளது மிகவும் வருந்தத்தக்கது. ஏனென்றால், இதனால் கட்டணம் அதிகமாக வரக்கூடிய நிலை இருக்கிறது. அதற்கு விளக்கம் தெரியவில்லை. ஏற்கெனவே கொடுக்கப்பட்ட நிலைப்பாடுபற்றிக் கூறப்படவில்லை. நடைமுறையில் இருக்கும் வழிமுறைகளின் நிலை என்ன? டி.பி. எங்கே வாங்க வேண்டுமென்ற விவரம் இல்லை. இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டால், அருகிலுள்ள மாவட்டத்திலிருந்து பள்ளி, கல்லூரிக்குக் குழந்தைகளை ஏற்றிச் செல்லும்பொழுது வெளி மாவட்டங்களுக்குப் போய் வருவது என்ற வகையில் வரிச் சுமையானது அதிகமாக வரக்கூடிய ஒரு நிலை இருக்கிறது.

அதேபோல, குழந்தைகளின்மேல்தான் இந்த வரிச் சுமை விதிக்கப்படுகிறது. பள்ளிக்கூடங்களில் ஏற்கெனவே நம் நாட்டிலே அதிகமான கட்டணம் வசூலிக்கிறார்கள் என்று ஒரு பிரச்சினை இருக்கும்பொழுது, இவ்வாறு ஒரு வரி விதிப்பைக் கொண்டுவரும்பொழுது அந்தக் குழந்தைகள்மேல்தான் சுமை வரும், பெற்றோர்கள் அதிக கட்டணம் கட்டக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைப் பரிசீலிக்க வேண்டும். ஏற்கெனவே கல்விக் கட்டணப் பிரச்சினை இருப்பதால், அருகிலுள்ள மாவட்டக் குழந்தைகள் பக்கத்திலே மாவட்ட எல்லையைத் தாண்டிச் செல்ல வேண்டுமென்றால் அதற்கும் permission வாங்கிக்கொண்டு போகவேண்டும். அப்படிப்பட்ட சிரமமான சூழ்நிலை இருக்கிறது.

[திரு. சி. சண்முகவேலு] [2010 நவம்பர் 12 பிற்பகல் 2-15

அதற்கென்று நீங்கள் கூடுதல் வரி போடுவதால் அவர்களை பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் 50 குழந்தைகளை ஒரு டூரிஸ்ட் வண்டி கூட்டிக்கொண்டு போனால், ஏற்கெனவே இருக்கிற வரி அல்லாமல், இப்போது மறுபடியும் ஒரு நபருக்கு ஒரு வாரத்திற்கு 30 ரூபாய் வரி போடும்போது, ரூ.1,500 கட்டக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மூன்றாவது உட்பிரிவு திருத்தத்திலே வரக்கூடிய வரி விதிப்பைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால்கூட, ஒரு இருக்கைக்கு ரூ.30 என்று இருந்தால் டி.பி. வாங்கி ஒட்டும்போது, இதில் தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அதேமாதிரி, இதனை பிரைவேட்டும் சரி, பள்ளியில் இருக்கக்கூடிய வாகனமும் சரி தவறுதலாகப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகூட இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி வாகனங்களைப் பொறுத்தவரையில், உங்களது ஆட்சியில் நீங்கள் அமைச்சராக இருந்தபோது, ஒரு இருக்கைக்கு காலாண்டிற்கு வரி ரூ.500. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வந்த பிறகுதான், பள்ளிக் குழந்தைகளுக்கு அதிக செலவு வைக்கக்கூடாது என்ற காரணத்தினால், ரூ.50 என்று குறைக்கப்பட்டது. அந்த இடைப்பட்ட காலத்திற்குக்கூட வரியைப் பள்ளி நிருவாகங்கள் இன்னமும் கட்டவில்லை. எனவே, இந்த அரசு பள்ளிக் குழந்தைகளுக்கு அதிகமான செலவினத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை. இது ஒன்று.

இன்றைக்கு பொதுத் துறையில் இயங்குகின்ற போக்குவரத்து, தனியார் துறையில் இயங்குகின்ற போக்குவரத்தின் அளவுக்கு கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இருக்கின்ற பேருந்துகள் சரிசமமாக வந்திருக்கின்றன. அவர்கள் திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை அந்தப் பிள்ளைகளை ஏற்றிச் செல்வதற்கு வரி போடவில்லை.

2010 நவம்பர் 12] [திரு. கே.என். நேரு]

சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அந்தப் பேருந்துகளை எடுத்து வெளியிலே செல்கின்றபோது, அவர்களுக்குத்தான் இந்த வரி போடப்பட்டிருக்கின்றது. அதுவும் குறிப்பாகப் பிள்ளைகள் போகும் போது ரூ.30 என்றும், அதிலே பணியாற்றுகின்றவர்கள் சென்றால் ரூ.90 என்றும் அதிலே போடப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே ஆம்னி பேருந்துகள் தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு பேருந்துக்கு ஒரு இருக்கைக்கு மூன்று மாதத்திற்கு ரூ.3,000, என்று வருகிறது. இதையெல்லாம் கணக்கிலேகொண்டுதான், மிக மிகக் குறைவாக வரி போட்டு, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்தப் பேருந்துகளை உபயோகப்படுத்தினால், அரசுக்கு வருவாய் வரவேண்டும். தவறுதலாக, வெறுமனே எடுத்துச் செல்லக்கூடாது என்ற நோக்கத்தோடுதான் இந்த வரி போடப்பட்டிருக்கிறது. யார் மீதும் சுமை சுமத்துவதற்காக அல்ல என்பதைத் தெரிவித்து இதனை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஔ) சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2010), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.